முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1249

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.03.2023**, புதன்கிழமை

1. வரம்பல கலியினில் பெற்றுமே
   வையகத்தை நல்வழி நடத்தவேண்டி
   அறம்பல செய்து உலகமக்களை
   ஆற்றல்மிக்க ஞானவான்களாக மாற்றவந்த
2. வந்தநல் அரங்கனே ஞானியே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
   செப்பிடுவேன் சுபகிருது சால் திங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 17 ம் நாள் 01.03.2023, புதன்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் அவதார நோக்கமே
   தரணியை பாதுகாக்கும் அம்சமாகும்
   மண்ணுலகில் அரங்கன் கொள்கை முழுமைபட
   மகத்துவமாக ஏற்று வளர்ச்சிகாண
4. காணவே இந்த உலகம் ஞானலோகமாக
   கலியிடர்களையெல்லாம் வென்று ஞானயுகமாக
   பெருமைபட வருமுலகில் மாற்றம்
   பேரற்புதமாய் காணக்கூடும்
5. கூடாத எதிர்வினைகள் அனைத்தும்
   குருஅரங்கன் தர்மபலத்தால் அகன்றோடும்
   நாடெங்கும் உயர்தொண்டர்கள் பெருகபெருக
   ஞான ஆட்சியாக இந்த உலகம் மாற்றங்காணும்
6. காணவே அரங்கனை தேடிக்கண்டு
   கலியுகத்தார் ஞானம் பயின்றுவர
   தானாக உலகமாற்றம் தானும்
   தரணிகண்டு அமைதி பாதுகாப்பு மிகுதிகாணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–